ஆல்ஃபிரட் ஜெக்டர்

புத்தக சேகரிப்பாளன்



ஆல்ஃபிரட் ஜெக்டர்

புத்தக சேகரிப்பாளன்





ஆசிரியர் **கெல்லி டிபுச்சியோ**

படங்கள் **மேக்கி பாமிண்டுவான்**

தமிழில் **குமரேசன் முருகானந்தம்**

வானிலையின் தாக்குதலுக்குள்ளான புழுக்கமான அவனது பழைய வீட்டின், மூலை- முடுக்கெல்லாம் குவியல் குவியலாகவும், வரிசை வரிசையாகவும், அடுக்கடுக்காகவும் அவனுக்குப் பிரியமான கெட்டியான அட்டையுடைய புத்தங்கள் திணித்து வைக்கப்பட்டிருந்தன.



இளம் சிறுவனான **ஆல்ஃபிரட்**,அனைவருக்கும் பிடித்தவனாக இருக்க விரும்பினான். ஆனால் ஒவ்வொரு முறையும் அவன் ஏதாவது ஒன்றை முயற்சி செய்தபோது எப்போதும் தவறாகிவிடுவதுண்டு. புத்தகங்கள் அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்று கண்டுபிடித்த நாள் வரை அவன் தனிமையாகவும் கூச்ச சுபாவமுள்ளவனாகவும் இருந்தான்.





நேரம் பறந்தது புத்தக அடுக்குகளும் வளர்ந்தன, ஒவ்வொரு அலமாரியும் நிரம்பி வழிந்தது. **ஆல்ஃபிரட்** வளர வளர, அவனது சேகரிப்பில் புத்தகங்களின் எண்ணிக்கையும் வளர்ந்தது.



ஆல்ஃபிரட்டின்
அலமாரிகள்,
பண்ட
பாத்திரங்களுக்கு
பதிலாக
புத்தகங்களால்
நிரம்பி வழிந்தன.



மீன் தொட்டிகள், மீன்களுக்கு பதிலாக
மீன்களைப் பற்றிய என்சைக்ளோபீடியாக்களைக்
(கலைக்களஞ்சியப் புத்தகங்களைக்)
கொண்டிருந்தன.

இன்னும் ஒரே ஒரு புத்தகம்
கிடைத்தால் மகிழ்ச்சியடைவேன்
என்று எப்போதும் நினைத்தான்.
ஒன்று இரண்டானது, மூன்றானது,
நான்கானது.... அடுக்குகள்
மெள்ள மெள்ள உயரமாகிக்
கொண்டேயிருந்தது.
“போதாது,” “எல்லா
புத்தகங்களும் தனக்கு
வேண்டும்!” என்று
முடிவுக்கு வந்தான்.





மலை மீது இருக்கும் அவனது வீடு விரைவிலேயே நிரம்பி வழிந்தது, ஆனால் **ஆல்ஃபிரட்** தனது கனவை இன்னும் எட்டவில்லை, ஓ, நெருங்கிவிட்டிருந்தான்!

அவன் நகர் முழுவதும் நாலாபுறமும் நடந்தே தேடினான். அவன் எந்த வாய்ப்பையும் விடவில்லை, ஒவ்வவொரு வீட்டோரிடத்திலும் கேட்டான்.

கடைசி, கடைசியாக, அவனது தேடல் முடிவை நெருங்கியது. அவனுடைய விரல்கள் நடுங்கின. அவனது கண்களில் கண்ணீர் வழிந்தது.

கடைசி புத்தகம், ஒரு கன்னங்கள் கொழுகொழுத்த, குள்ள சிறுவனுடையது.

“அந்த புத்தகத்திற்கு பதிலாக நான் இந்த பளபளப்பான சிவப்பு சைக்கிளை உனக்கு தருகிறேன் ”



நகரத்தில் யாரிடமும் பெரியதோ சிறியதோ, புத்தகம் ஒன்று கூட இல்லை.
புத்தக சேகரிப்பாளனான **ஆல்ஃபிரட் ஜெக்டர்** அனைத்தையும் சேகரித்து எடுத்துக்கொண்டான்!

அவன் நிறைய மெழுகுவர்த்திகளையும் உணவையும் எடுத்துக்கொண்டு புத்தகம் நிரம்பிய தனது வீட்டின் கதவை மூடித் தாழிட்டுக் கொண்டான்.





ஆல்ஃபிரட் மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும். அவருடைய கனவு நிறைவேறியது! ஆனால் இன்னும் ஏதோ ஒரு குறை. "இப்போது நான் என்ன செய்வது?"


டிக்

டிக்

டிக்...



... டாக் என்றது சுவர் கடிகாரம். “நல்லது, நிச்சயமாக அவற்றையெல்லாம் நான் வாசித்தேயாக வேண்டும்!” என்று சொல்லிக்கொண்டான்.



நாட்கள் வாரங்களாகவும்,
மாதங்கள் வருடங்களாகவும்
ஆகின. **ஆல்ஃபிரட்** சோய்ஸ்
முதல் ஷேக்ஸ்பியர் வரை
எல்லாவற்றையும் படித்தார் ...



இதற்கிடையில் ...

. . . புத்தகங்கள் இல்லாத மக்களின்
வாழ்க்கை மிகவும்
மந்தமானதாகவும்,
தெளிவற்றதாகவும், முற்றிலும்
சுவையற்றதாகவும் மாறிவிட்டது.





உரையாடல்கள் ஆர்வமளிக்காதவையாகவும்,
உறங்கச் செல்லும் நேரங்கள் சலிப்புத்
தட்டுவதாகவும் இருந்தன.
இதுவரை வாசித்துக் காட்டப்படாத
குழந்தைகள் இருந்தனர்!

இறுதியாக ஒரு நாள், **ஆல்ஃபிரட்**டின் கடைசி புத்தகமும் வாசித்து முடித்தாகிவிட்டது. அவர் கதையைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்த போது, அவர் மனதில் சிந்தனைகள் தோன்றியபடி இருந்தன.

அந்த வயதான மனிதர் தன்னை சுற்றியும் பார்த்தார். இவர் கதவைத் திறந்து வெளியே செல்ல முடியாதபடி புத்தகங்கள் வாயிலை அடைத்து அவரை வீட்டினுள்ளேயே அடைத்துவிட்டிருந்தன.





ஆல்ஃபிரட் மூச்சடைப்பது போல உணர்ந்தார். “இப்போதென்ன?" அவர் கூச்சலிட்டார். "இன்னும் ஏதோ குறைகிறது! அது என்ன?" என்று பெருமூச்செறிந்தார்.

அவர்முன்பு உணர்ந்த மகிழ்ச்சி, மோசமானதொரு தண்டனையாக மாறியது. அவர் விரும்பிய புத்தகங்கள் அவரது கல்லறைப் போல மாறிப்போனது!




அல்ஃபிரட், உயரமான புகைபோக்கியின் வழியாக ஊர்ந்து, வளைந்து நெளிந்து, ஏறி களைகள் படர்ந்த தனது வீட்டின் கூரையின் மேற்புரம் வந்தார்.

துருப்பிடித்த சிவப்பு நிற மிதிவண்டி லொடலொடவென சப்தமிட்டபடி மலைமீது வருவதைப் பார்க்கும் வரை கூரையின் மேல் மிகவும் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.



அத்தனை வாசிப்பும் இப்போது **ஆல்ஃபிரட்டை** மிகவும் அறிவாளியாக ஆக்கியிருந்தது. எண்ணங்கள்அவர் அறிவிலிருந்து தோன்றி அவர் மனதிற்கு பரவின!

"*நான் கண்டு பிடித்து விட்டேன்!*" **ஆல்ஃபிரட்** கூரைமீதிருந்து கூவினார். ‘நில், இளைஞனே! இதோ உனக்கு ஒரு பரிசு! பிடித்துக்கொள்."
ஆல்ஃபிரட் மகிழ்ச்சியாகவும் ஒரு பறவையைப் போல சுதந்திரமாகவும் உணர்ந்தார். எங்கிருந்து வந்ததோ அதற்கே திருப்பியளிக்க இன்னமும் புத்தகங்கள் இருக்கின்றன.
இச்செய்தியைப் பரப்பு, என்றார்."



ஆல்ஃபிரட்
இளைஞர்களுக்கும்
பெரியவர்களுக்கும்
புத்தகங்களைக்
கொடுத்தார்.
கதைகள்
சொல்லப்பட்ட
போது சிரித்தபடியும்,
புன்னகைத்தவாறும்
இருந்தார்.

மறுபடியும், ஊர்
மக்கள் எல்லோரும்
புத்தகம்
வாசிக்கிறார்கள் ...

பேக்கரிகளில்,
பேருந்துகளில்,
மரங்களில்
தலைகீழாக
தொங்கிக்
கொண்டும் கூட!



நண்பர்கள் சூழ இருந்த **ஆல்ஃபிரட் ஜெக்டர்**, "பகிர்ந்து கொள்ளப்படும் புத்தகங்களே சிறந்த புத்தகங்கள் " என்று அறிவித்தார்.



வெப்பமான, வானிலையின் தாக்குதலுக்கு உள்ளான அவனது பழைய வீட்டின், மூலை-முடுக்கெல்லாம் குவியல் குவியலாகவும், வரிசை வரிசையாகவும், அடுக்கடுக்காகவும் அவனுக்குப் பிரியமான கெட்டியான அட்டைகொண்ட புத்தங்கள் திணிக்கப்பட்டிருந்தன.

ஆல்ஃபிரட் ஜாக்டருக்கு மகிழ்ச்சியைத் தரும் ஒரே விஷயம் புத்தகங்களைச் சேகரிப்பதுதான். எனவே, மலைமீது இருக்கும் தனது வீடு முழுவதும் பெரியதும் சிறியதுமான புத்தகங்களால் நிரம்பும் வரை கடைசி புத்தகத்தையும் சேகரிக்கும் உறுதியான செயலில் இறங்கினான். ஆனால் மற்ற நகரவாசிளுக்கு படிக்க புத்தகம் எதுவும் இல்லையெனில் என்ன நடக்கும்? ஒரு நல்ல புத்தகம் தரும் உண்மையான மகிழ்ச்சியை அடைவதன் அர்த்தம் என்ன என்பதை இந்த புத்திசாலித்தனமான கவிதை போன்ற கதையில், ஆல்பிரட் ஜெக்டர் கண்டறிகிறார்.

முற்றும்

ஆல்ஃபிரட் ஜாக்டர்

புத்தக சேகரிப்பாளன்

ஆசிரியர் கெல்லி டிபுச்சியோ

படங்கள் மேக்கி பாமிண்டுவான்



தமிழில் குமரேசன் முருகானந்தம்

நியூயார்க் டைம்ஸ் அதிகம் விற்பனையாகும் *கிரேஸ் ஃபார் பிரசிடென்ட்* உட்பட பல குழந்தைகள் புத்தகங்களின் ஆசிரியர் ஆவார். அவர் *டைனோஸ்னோராஸ், வாட் இஸ் த மேஜிக் ஓர்ட்?* மற்றும் *ரெட் ஹாக்ஸ்* ஆகியபுத்தகங்களையும் எழுதியுள்ளார். கெல்லி தனது கணவர் மற்றும் மூன்று குழந்தைகளுடன் தென்கிழக்கு மிச்சிகனில் வசிக்கிறார்.

ஜெஃப் பிரவுனின் *பிளாட் ஸ்டான்லி* தொடர், மற்றும் கரோலின் கீனின் *நான்சி ட்ரூ, க்ளூ க்ரூ* தொடர் மற்றும் கிறிஸ்டின் க்ரோவின் *பெட் டைம் அட் த ஸ்வம்ப்* உள்ளிட்ட பல குழந்தைகள் புத்தகங்களுக்கு படங்கள் வரைந்தவர். அவர் மெக்ஸிகோவின் சான் மிகுவல் டி அலெண்டேவில், அவரது மனைவி அயோமோனுடனும், அவர்களின் கெட்டிக்கார நாயான விண்டருடனும் வசித்து வருகிறார்.



கெல்லி டிபுச்சியோ



மேக்கி பாமிண்டுவான்